Pastoral Letter No/GR/37/2018

# ஆயர் திருமுகம்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

திருவழிபாட்டு ஆண்டின் மங்களவார்த்தைக் காலத்தில் நாம் இருக்கிறோம். டிசம்பர் 1 முதல் 25 வரையிலான தினங்கள் ஈசோவை நம் இதயத்திலும் மனதிலும் ஏற்பதற்கான நாட்களாக உள்ளன. கிறிஸ்மஸ் விழாவிற்கு முந்தைய இந்த நாட்களை இருபத்தைந்து நோன்பு என அழைக்கிறோம். உலகம் விளம்பும் இன்பங்களை ஒதுக்கி, இறைச்சிப் பொருட்களைத் தவிர்த்து, ஒறுத்தலை ஏற்பதற்கான நாட்கள் இவை. கிறிஸ்து பிறந்ததன் மகிழ்ச்சியை கொண்டாடுவதற்காக நோன்பு ஏற்க வேண்டியதன் அவசியம் என்ன? எனும் கேள்வி இயல்பாகவே எழலாம். மகிழ்ச்சியின் நற்செய்தியை கொண்டாட நோன்பு எதற்கு? எனும் கேள்வியும் வரலாம். நோன்பு என்பது ஆன்மீக தயாரிப்பிற்கான நாட்கள். மிக முக்கியமான நபர்களை வரவேற்க நம் வீடுகளையும் பங்குகளையும் தயார் செய்வது நமக்கு பழகிப்போன ஒன்று. அப்படியானால் அரசர்க்கெல்லாம் அரசரான கிறிஸ்துவை வரவேற்பதற்கான தாயாரிப்புகள் எந்த அளவு பெரிதாக இருக்க வேண்டும்? தயாரிப்பு எப்போதும் தியாகங்களை கோருகிறது. ஆண்டவராகிய கடவுளிடமிருந்து பத்துக் கட்டளைகளைப் பெறுவதற்கு முன், மோசே நாற்பது இரவும் பகலும் உணவும் தண்ணீருமின்றி தவம் இருந்தார் (விப 34:28). ஆண்டவரின் மலையை அடைவதற்காக எலியா நாற்பது இரவும் பகலும்

உணவும் தண்ணீருமின்றி நடந்தார் (1 அர 19:8). “என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையைத் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்” (மத் 16:24) என ஈசோ நமக்கு அறிவுறுத்தினார். ஆகையால், கிறிஸ்மஸ் விழாவுக்கு தயாரிப்பாக நாம் ஏற்கும் 25 நோன்பு, குழந்தை ஈசோவை உள்ளத்தில் ஏற்பதற்கான நாட்களாக உள்ளன.

மங்களவார்த்தை காலத்தின் இறுதியில் நாம் கிறிஸ்து பிறப்பு காலத்தில் நுழைவோம். நம் மீட்பரின் பிறப்பை மகிழ்ச்சியோடு கொண்டாடவும் செய்வோம். குளிர்காலத்தில் வரும் கிறிஸ்மஸ், முரண்களின் கலவை எனலாம். பகலுக்கு நேரம் குறைவு, அதனால் சூரிய வெளிச்சம் குறைவாக கிடைக்கும் நாட்கள். அவ் வேளையில் நாம் ஒளி விளக்குகளால் வீடுகளையும் வீதிகளையும் அலங்கரிக்கிறோம். குளிர் காலத்தில் வெப்பம் குறைவு. நாமோ நெருப்பு பற்றவைத்து கிறிஸ்மஸ் அனுசரிக்கிறோம். ஆண்டின் முடிவில் வாழ்வின் தொடக்கமாக குழந்தையாகப் பிறந்தவரின் கொண்டாட்டம் நிகழ்கிறது. “அந்த ஒளி இருளில் ஒளிர்ந்தது; இருள் அதன்மேல் வெற்றி கொள்ளவில்லை” (யோவா 1:5) என்று யோவான் நற்செய்தியில் நாம் வாசிக்கிறோம். சூரியனின் வெளிச்சமானது, உலகைப் பரப்புகிறது. உள்ளுக்குள்ளே எரியும் நெருப்பால் அது உலகுக்கு ஒளி கொடுக்கிறது. அதைப் போன்று நாமும் இறையன்பால் உள்ளுக்குள் எரிந்து வெளிச்சமாக உருமாறிட அழைக்கப்படுகின்றோம்.

“இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவீர்... இம்மானுவேல் என்றால் ‘கடவுள் நம்மோடு’ என்பது பொருள்” (மத் 1:23). நம்மோடு வசிக்க வந்திருக்கும் கடவுளின் உறவை அறிந்து அவரின் பிரசன்னத்தை உள்ளார உணர முயல்வோம்.

மழலை ஈசோ மன்னிப்பின் செய்தியைச் சுமந்து வருகிறார். ஒருவர் மற்றவரை மன்னித்து வாழும் போது, அவர் அருளும் மன்னிப்பை நம்மால்

ஏற்க இயலும். “எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால் எங்கள் பாவங்களையும் மன்னியும்” (லூக் 11: 4) என்பதே ஆண்டவர் கற்பித்த செபம் தரும் செய்தியாகவும் உள்ளது. கடவுளின் உருவில் படைக்கப்பட்ட ஒரே தந்தையின் பிள்ளைகளாக மானிடர் யாவரும் உள்ளனர் என்பதை கிறிஸ்மஸ் உணர்த்துகிறது. பல்வேறு மதங்களைச் சேர்ந்த மனிதர் யாவரும் அமைதியிலும் மகிழ்ச்சியிலும் சேர்ந்து வாழும் கலையை இந்தியர்களாகிய நாம் கற்றிருக்கிறோம். பிரிவினையில் விஷம் ஊட்டும் மதவாதம் சில இடங்களில் தலைதூக்குவதை விதிவிலக்காகக் கொள்வோம். இச்சம்பவங்களைக் கண்டு மனம் துவளாமல், தொடர்ந்து மன்னிப்பின் செய்தியை ஏந்தியவர்களாய் அமைதியில் வாழ, அதன் தூதர்களாக செயல்பட கிறிஸ்மஸ் நமக்கு அழைப்பு விடுக்கிறது. கடைசி இரவுணவின் வேளையில், “எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக” (யோவா 17:21) என்னும் ஆண்டவரின் செபம் நமது செவிகளில் முழங்குவதாக.

கிறிஸ்மஸ் தியாகத்தின் செய்தியையும் நமக்குக் கற்பிக்கிறது. சிறு சிறு பரிசுகளை பிறரோடு பகிர்ந்திடும் போது அது வெளிப்படுகிறது. கொடுப்பதிலே அடங்கியுள்ள தியாகத்தையும் அதன் பயனாய் விளையும் மனமகிழ்ச்சியையும் கிறிஸ்மஸ் அறிவுறுத்துகிறது. கடவுளின் மாட்சியில் விளங்கிய ஈசோ, தமது கடவுள் தன்மையிலிருந்து இறங்கி வந்து மானிடனாகப் பிறந்தார். இதைக் குறித்து தூய பவுல், “கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாய்க் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்” (பிலி 2:6-7) எனக் கூறுகிறார். மனிதராகப் பிறந்த ஈசோவை உள்ளார அறிதலே அவரை உள்ளத்தில் ஏற்க ஒரே வழி. புத்தகங்களோ பிற படிப்பினைகளோ அவ்வறிவையும் அனுபவத்தையும் தந்திடாது. இதயம் உணரும் இதமான

அனுபவம் ஒன்றே மனிதராதல் என்னும் மறைபொருளின் உண்மையை அறிவதற்கான வழி.

கிறிஸ்தவர்களுக்கானது மட்டுமல்ல கிறிஸ்மஸ். அது அகில உலகுக்குமானது. சிறு பறவைகள், மரங்கள் என இயற்கை முழுவதும் கிறிஸ்துவின் பிறப்பில் அகம் மகிழ்கின்றது. கிறிஸ்மஸ் இரவு அன்று விலங்குகளும் பறவைகளும் பேசும் ஆற்றலை கடவுளிடமிருந்து பெற்றன என்றும், அவை கடவுளை புகழ்ந்து பாடின என்றும் பிரஞ்சு கதை ஒன்று கூறுகிறது. இயற்கையை நம்முடைய ஒரு பகுதியாக ஏற்கும் போது உள்ளங்களில் கனவு பிறக்கும். அதன் விளைவாக மானிடர் அனைவரையும் ஏற்று முழுமையாக அன்பு செய்ய நம்மால் முடியும்.

அரசர்க்கெல்லாம் அரசர் ஏழை பாலனாய் மாட்டுக்கொட்டிலில் எளிமையின் உருவாய் பிறந்தார். அவர் பிறப்பு எளிமையாய் இருந்து என்றால் நாமும் எளிமையை ஏற்க வேண்டாமா? உலகை ஒளிர்விக்கும் கிறிஸ்துவாகும் ஒளியை மனதில் ஏற்க நாம் எழுவோம். நம் குடும்பத்தினருக்கும் நம் சகோதரர் சகோதரிகளுக்கும் கிறிஸ்துவின் ஒளியைக் கொடுப்போம். அவர்களுக்காக செபிப்போம். அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். குழந்தை ஈசோவின் ஆசி உங்களோடு என்றும் இருப்பதாக.

ஆயர் இல்லம்

17.12.2018

என்றும் ஈசோ மெசியாவில்

✞ **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

*குறிப்பு: இவ் ஆயர் திருமுகத்தை 23.12.2018 ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியின் போது வாசிக்க வேண்டும்.*

Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India